கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்



www.newwisdomministries.com

13.03.2022 ஞானம் 5 – ஒலி 11





அருட்பணி.சைமன் பீட்டர்

# விதை, விழுந்து, மடிந்து எழுந்தே விளையும்.... விதி விலக்கு இல்லை.

மதிப்பிற்குரிய வாசக அன்பர்களே, உங்கள் அனைவரையும் இவ்வார ஞான ஒலி இணைய இதழின் வழியாக சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் வணக்கங்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தத் தவக்காலம் நமக்கு வல்லமையையும், ஆன்ம முதிர்ச்சியையும் தருகின்ற காலம். ஒன்றின் பலனை முழுமையாகப் பெறுவதற்கு முதல் படி என்னவென்றால், அதனை இருப்பது போல ஏற்றுக் கொள்வதுதான். எது எதற்காகப் படைக்கப்பட்டுள்ளதோ அதை அதற்காகவே ஏற்றுக் கொள்ளும்போதுதான் அதனை நமக்கானதாக்கிக் கொள்ள முடியும். நம்மைச் சாராத மற்றும் நமக்கு நன்மை தரவல்ல வேறு ஒன்றை நமதாக்கிக் கொள்ள வேண்டுமென்றால், அதை அதன் தனித்தன்மையோடு, அதன் இயக்கத்தோடு, அதனோடு இயைந்து நமக்குள் ஏற்றுக் கொள்ளும்போதுதான் அது நம்மில் வளர்ந்து நமதாக உருமாறும். அப்போதுதான் நாம் பரிணாம வளர்ச்சி பெறுகின்றோம். ஒன்று மற்றொன்றோடு இணைந்து புதுவடிவம் பெறுவதுதான் ஒன்றிணைந்த வளர்ச்சியாகும். அதற்காகத்தான் படைப்பில் பண்முகத் தன்மை உள்ளது. ஒன்று மற்றொன்றோடு இணைந்து பரந்துபட்ட வளர்சிதை மாற்றமே இந்த பிரபஞ்சத்தின் இயக்க நியதியாகும். ஆகவேதான் நட்பு, திருமணம், குடும்பம் என்று அனைத்தும் இணைந்த, இயைந்த நிலையில்தான் இவ்வுலகம் தவறாது இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த இயக்கத்திலே ஒன்று மற்றொன்றை ஏற்றுக் கொள்ளுதல் என்ற செயல் உயிர்களின் பரிணாமத்திற்கு தவிர்க்கப்படமுடியாத துவக்கப் புள்ளியாகும்.

தென்றலே ஆசை கொண்டு தோகையைக் கலந்ததம்மா....என்ற பாடல் வரிகள் இதை மிகக் கவித்துவமாக நமக்குச் சொல்லுகின்றது. மரம் சும்மா இருந்தாலும் காற்று அதைச் சும்மா இருக்க விடுவதில்லை. இதனால்தான் உயிரினங்களுக்கான உயிர் மூச்சு பரந்துபட்ட உபயோகத்திற்குக் கிடைக்கின்றன. எந்தவிதக் கால தாமதமின்றி இடைவெளியின்றி அனைத்தும் ஒன்றோடு ஒன்று கலந்து இயங்கிக் கொண்டு இருக்கின்றது. பிரபஞ்சம் இவ்வாறுதான் உயிர்த் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதனால்தான் அனைத்து உயிரினங்களுக்கும் தேவையான அனைத்தும் கிடைத்துக் கொண்டிருக்கின்றது.

ஆறு நிற்காமல் ஓடிக் கொண்டிருப்பதும். காற்று எட்டுத் திக்கும் சுழன்று கொண்டிருப்பதும், ஆண் உயிரினமும், பெண் உயிரினமும் ஒன்றை ஒன்று ஈர்த்துக் கொண்டு கலந்திருப்பதும், அனைத்தும் பலுகிப் பெருகிக் கொண்டிருப்பதும், ஒன்று மற்றொன்றால் வாழ்வதற்காகத்தான். ஒன்வொன்றும் எதற்காகப் படைக்கப்படுள்ளதோ, அதை ஏற்றுக் கொள்வதே படைப்பிலக்கணம். ஒவ்வொன்றும் அதன் தனித்தன்மையோடு மற்றவற்றில் பிண்ணிப் பிணைந்திருப்பதும், அதிலே அது நிலைத்திருப்பதும், தன் இயல்புக் கோற்ப இயங்கி இயங்கி தன் பங்களிப்பை இம்மி பிசகாது வெளியுலகிற்கு வழங்கி கொண்டிருப்பதில்தான் இந்தப் பிரபஞ்சம் நீடித்து இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்த மாபெரும் இரகசியத்தை உணர்வதற்கான கால அவகாசத்தைதான் இந்தத் தவக்காலம் நமக்குத் தருகின்றது.

மனிதன் என்பவன் யார்? அவனின் ஆதிமூலம் எது? அவன் அவனின் விருப்பப்படியெல்லாம் வாழ உரிமையுள்ளதா? அவன் மட்டுமே பிழைத்துக் கொள்ளவா அழைக்கப்பட்டுள்ளான்? அப்படியென்றால் அவனுக்குக் குடும்பத் தேவை

எதற்கு? அவனுக்குச் சந்ததி எதற்கு? அவனால் தனியாக வாழ முடிவதில்லையே ஏன்? அவன் ஏன் மற்ற உயிர்களின் ஆதரவைத் தேடுகின்றான்? அந்த உணர்வு ஏன் அவனுக்குள் ஊற்றெடுத்துப் பாடாய்ப் படுத்துகின்றது? அவனும், அவன் குடும்பமும் மட்டுமே தனித்து வாழ முடியாது என்றுணர்ந்து மற்ற உறவுகளை அவனது உள்ளம் ஏன் தேடவேண்டும்? எல்லாம் இருந்தும் ஏதோ ஒன்று குறைகின்றதே, அது அனைத்து மனிதர்களிலும், பொருட்களிலும், கிடைக்கவில்லையே. அது என்ன? அது இந்த உலகத்தில் இல்லையே. இந்த உலகம் தராத ஒன்று அது என்ன? அது எங்கே இருக்கின்றது? அந்த உயரந்த சக்தி என்ன? அதை நமக்குள்ளேயே தேடிப் பெற்றுக் கொள்ளலாம் என்று நம் முன்னோர்கள் சொல்லியுள்ளார்களே. அப்படியே அதை நம் உள்ளுணர்வும் சொல்லுகின்றதே, அதை எப்படிப் பெற்றுக் கொள்ளலாம் என்ற சிந்தனைகள் ஊற்றெடுத்து நம்மை இவ்வுலகிலிருந்து நம்மை உயர்த்தி, விண்ணாளத் தேவையான ஆற்றலை இந்தத் தவக்காலம் தருகின்றது.

உலகத்திலேயே மிகக்கடினமான ஒரு காரியம் இருக்குமென்றால், நமது பேச்சை நாமே கேட்டு செயல்படுவதுதான். தன்னை வெல்பவனே தன்னையும், தரணியையும், விண்ணையும் ஆளமுடியும் என்பதை நமக்குப் புரிய வைக்கிறது இக்காலம்.

தாயும் பிள்ளையும் ஒன்றானாலும், வாயும் வயிறும் வேறு வேறு என்பதையும், நமது பசிபோக்க நாம்தான் சாப்பிட்டாக வேண்டும் என்பதையும் நமக்குச் சூடுபோட்டுக் கற்றுத் தரும் காலமிது.

அதைத்தான் இயேசுவிற்கும் நடந்தது. கடவுளாக இருந்து மனிதரில் ஒருவராகப் பிறந்து தந்தையின் திட்டப்படி சிலுவைச் சாவிற்குத் தன்னை அர்ப்பணிக்கத் தயங்கி கெத்சேமேனித் தோட்டத்தில் இரத்த வியர்வை வியர்த்து அதிலிருந்து தப்பிக்க வைக்க வேண்டுமென்று தந்தையிடம் கெஞ்சியபோது, ஒவ்வொன்றும் அதன் பணியை அதுவே செய்தாக வேண்டும் என்று தான் விதித்த பிரபஞ்ச விதிக்கு மாறாக தன் மகன் விதி விலக்கு கேட்டபோது, நீ அதற்காகத்தானே மனிதனாய்ப் பிறந்தாய், இப்போது ஏன் தயங்குகின்றாய். நியதி அனைவருக்கும் ஒன்றுதான் நீ இறைமகன் என்பதற்காக விதி விலக்கு தரமுடியாது. நியமிக்கப்பட்டது நியமத்தோடுதான் நடக்க வேண்டும் என்று மௌனம் காத்தார். இரக்கமே உருவான தந்தை தன் மகனிடம்கூட தயவு காட்டாத நேர்மையாளர். இறைத்திட்டமே அனைத்திற்கும் நல்லவையையேத் தரும். வலிகூட விண்ணவன் வழியில் வாழ்வு தருகின்றது. அதன்படியே இந்தச் சிலுவைப் பயணத்தில்தான் மீட்பு நிறைவு பெறும். ஆகவே இதை உணர்ந்து இயேசு தன் விருப்பதினை விலக்கிவிட்டு, இறை விருப்பததை நிறைவேற்றினார். அதன்பிறகுதான் சாவு தோற்கடிக்கப்பட்டது, சாவின் கொடுக்கு உடைக்கப்பட்டது. இறைவிருப்பம் அதன் இயல்பு மாறாது கடைப்பிடிக்க வேண்டும். அதற்கு மாறான நடப்புகள் அனைத்தும் அழிவைத் தருகின்றன அதற்காகவே இத் தவக்காலத்தின் தேவை உண்டானது.

மனித மனத்தின் இறைவிரோத போக்கு மரணத்துக்கு ஒப்பான இழிவைத் தரும் ஆனால், இறைவனோடு இணைந்து அவர் சொல்லும் வாழ்வில் அனைத்தும் முழுமை பெறுகின்றன என்பதை திட்டவட்டமாக உணர்த்துகின்ற காலம் இது. அதனை உணர்ந்து உண்மையின் வழியில் நடக்க நம்மை அழைக்கின்ற காலம் இது. மீட்புக்கு இறைவனின் விருப்பத்திற்கு அடிபணிந்து போவதைத் தவிர வேறு வழியோ, யோசனையோ இல்லை என்பதை உணர்ந்து கொள்வோம். விழித்துக் கொண்டோரெல்லாம் பிழைத்துக் கொள்வார்.

இயேசுவே கெத்சேமேனித் தோட்டத்தில் விழித்துக் கொண்டார். வேறு வழியின்றி இறைவனுக்கு மட்டுமே பணிந்தார். அவரும் இறைமகனாய் மீண்டும் எழுந்தார். அவரின் பணிவில், பணியில் நாம் அனைவரும் மீட்கப்பட்டோம். நாமும் அவர் வழியில் இறைவனோடு இணைவோம், இன்புற்றிருப்போம்.





# விவிலியம் அறிவோம் – 29

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF

## சோதோம் நகரின் அழிவு

சோதோம் கொமோரா நகர்களின் அழிவு ஆபிரகாமும் ஆண்டவரும் கதையோடு தொடர்புடைய ஒரு கிளைக்கதையாக உள்ளது. தொடக்கத்தில் இந்தக்கதை மக்கள் மத்தியில் உலவிய ஒரு தனிக்கதையாக இருந்திருக்கலாம்; நாளடைவில் இந்தக்கதை ஆபிரகாமின் கதையோடு இணைக்கப் பட்டிருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். ஆண்டவர் ஆபிரகாமை மம்ரே பள்ளத்தாக்கில் சந்தித்தபோது மூன்று மனிதர்களாக ஆபிரகாமைச் சந்திப்பதைப் பார்த்தோம். அந்த மூவரில்; ஆண்டவர் ஆபிரகாமுடன் உரையாடுவதற்காகத் தங்கிவிடுகின்றார். ஏனைய இருவரும் ஆண்டவரின் தூதர்கள். அவர்கள் ஆண்டவரிடமிருந்து பிரிந்து சோதோம் நகருக்கு வருகின்றனர். சோதோம் நகருக்கு வந்த இருவரும் ஆண்டவரின் தூதர்கள் என்பதை தொநூ 19:13 உறுதி செய்கிறது. இந்த இடத்தின் மக்களுக்கு எதிராகப் பெருங்கண்டனக்குரல் ஆண்டவர் திருமுன் எழுந்துள்ளதால், நாங்கள் இந்த இடத்தை அழிக்கும்படி எங்களை அவர் அனுப்பியுள்ளார் என அவர்கள் கூறுகின்றனர்.


ஆண்டவரின் தூதர்கள் சோதோம் நகருக்கு வரும்போது லோத்து நகரின் நுழைவாயிலில் அமர்ந்திருக்கின்றார். நகரின் மக்கள் வழக்கமாகக் கூடும் இடம்தான் நகரின் நுழைவாயில். தொநூ 13 வது பிரிவில் லோத்து ஒரு நாடோடியாக ஆடுமாடுகள் மேய்ப்பவராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். ஆனால் இந்தப் பிரிவில் அவர் ஒரு நகரவாசியாக சித்தரிக்கப்படுகின்றார். ஆபிரகாம் தன்னைத் தேடிவந்த மூன்று மனிதர்களையும் வரவேற்றுஉபசரித்ததுபோலலோத்துவும் ஆண்டவரின் தூதர்கள் இருவரையும் வரவேற்கின்றார்; அவர்களுக்குவணக்கம் செலுத்துகின்றார். அவர்கள் இளைப்பாறுவதற்கும் தங்குவதற்கும் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்கின்றார். அவர்களுக்கு உணவும் பரிமாறுகின்றார். ஆனால் அவர்கள் எதற்காக சோதோம் நகருக்கு வந்திருக்கிறார்கள் என்பது லோத்துவிற்குத் தெரியாது. அவர்கள் சோதோம் நகரை அழிக்க வந்தவர்கள் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. லோத்துவின் பார்வையில் அவர்கள் இருவரும் அன்றைய இரவைக் கழிப்பதற்காக நகருக்கு வந்தவர்கள். அதனால்தான் அவரது வீட்டில் தங்குவதற்கு அவர்களை அழைக்கிறார். அவர்கள் வேண்டாம், பொதுவிடத்தில் நாங்கள் இரவு தங்குவோம் (தொநூ 19:2) என முதலில் கூறினாலும் லோத்து வற்புறுத்தி அழைத்ததால் அவர்களும் லோத்துவுடன் அவருடைய வீட்டிற்குச் செல்கிறார்கள்.

மாலை வேளையில் அந்நகர மக்கள் லோத்துவின் வீட்டைச் சூழ்ந்துகொண்டு அவருடைய வீட்டில் விருந்தினர்களாக வந்திருக்கும் இருவரையும் வெளியில் அனுப்புவதற்குக் கட்டாயப்படுத்துகிறார்கள். அவர்களுடன் ஓரினச்சேர்க்கை கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். ஓரினச் சேர்க்கையில் ஊறிப்போன அந்த நகரமக்களிடமிருந்து ஆண்டவரின் தூதர்களை காப்பதற்காக தன்னுடைய கன்னிப்புதல்வியரை அவர்களுக்காக அளிப்பதற்கும் லோத்து முன்வருகிறார். வன்முறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் அந்தநகரின் மக்கள்

லோத்துவின் வேண்டுதல்களுக்குச் செவிகொடுக்கத் தயாராக இல்லை. தனது விருந்தினர்களாக தன் வீட்டில் தங்கியிருப்பவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் லோத்து எடுக்கும் அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிகின்றன. அந்தநகரின் ஒழுங்கற்ற ஆசைகளின் ஆற்றல் அவரைத் துரத்துகிறது. நல்லது நடக்கும் என நினைத்து செய்யப்படும் தீமைகள் தீமைகளைத்தான் பெற்றெடுக்கும் என்பதையும் இக்கதை வெளிக்கொணர்கிறது. விருந்தினர்களைக் காப்பாற்ற லோத்து மணமாகாத தனது இரு புதல்வியர்களை அவர்களுடன் உடலுறவு கொள்வதற்கு விட்டுக்கொடுக்க முன்வருவது நமது பார்வையில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கலாம். ஆனால் லோத்து வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த மனிதர்களுக்கு அது ஒரு பெரிய செய்தியாக இருந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் விரும் தோம்புதலை ஒரு அறநெறியாக பார்த்த சமூகம் விருந்தினர்களை பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் எந்த முயற்சிகளையும் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். லோத்துவின் முயற்சிகள் பலனளிக்காமல் இருந்தபோதும் அவரது முயற்சிகளை அந்த சமூகம் போற்றியிருக்கும்.

சோதோம் நகர அழிவைப் பற்றிய இந்தக் கதையை யாவே மரபு ஆசிரியர் எழுதுகிறார். அவரது பார்வையில் அன்று நாடோடிகளாக வாழ்ந்த மக்களினங்கள் விருந்தோம்புதலுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தார்கள். எனவே விருந்தோம்புதலுக்கு எதிராகச் செய்யப்படும் குற்றங்கள் பெரிய பாவங்களாகக் கருதப்பட்டன. அதைப்போல வன்புணர்வுக் குற்றங்களும் பெரிய பாவங்களாகவே கருதப்பட்டன. சோதோம் நகருக்குள் நடப்பதாகக் கூறப்படும் வன்செயல்கள் உண்மையானதுதானா? என்பதைப் பார்வையிடுவதற்காகத்தான் ஆண்டவரின் தூதர்கள் அங்கு வந்தனர். இப்போது அவர்களின் பாவங்கள் உறுதி செய்யப்பட்டுவிட்டன. எனவே ஆண்டவரின் தூதர்கள் செயல்படத் தொடங்குகின்றனர். லோத்துவின் முயற்சிகள் தோல்வியடைந்ததைக் கண்ட அவர்கள் லோத்துவையும் அவரது மகள்களையும் முதலில் காப்பாற்றுகின்றனர். அதன்பின் அந்த நகரமக்களை பார்வையற்றவர்களாக்குகின்றனர். சோதோம் நகரின் வன்செயல்கள் உறுதியாகிவிட்டதால் அதன் அழிவும் நெருங்கிவிட்டது. ஆண்டவரின் தூதர்கள் அந்த நகருக்குத் தாங்கள் வந்ததன் நோக்கத்தைக் கூறி லோத்துவையும் அவரது குடும்பத்தினரையும் அங்கிருந்துச் தப்பிச் செல்லக் கூறுகின்றனர். இங்கே உன்னைச் சார்ந்த வேறு யாரேனும் உளரோ? மருமகனோ, புதல்வரோ, புதல்வியரோ உன்னைச் சார்ந்த வேறு யாரேனும் இந்நகரில் இருந்தால், அவர்களை இவ்விடத்திலிருந்து உன்னுடன் அழைத்துக் கொண்டுபோய்விடு. இந்த இடத்தின் மக்களுக்கு எதிராகப் பெருங்கண்டனக்குரல்







ஆண்டவர் திருமுன் எழுந்துள்ளதால், நாங்கள் இந்த இடத்தை அழிக்கும்படி எங்களை அவர் அனுப்பியுள்ளார் (தொநூ 19:12-13) எனக் கூறி அவர்களைக் காப்பாற்றிக்கொள்ளக் கூறுகின்றனர்.

இரவில் நடந்த நிகழ்வுகளை வைத்துப் பார்க்கும்போது லோத்து அந்நகரை விட்டுச் செல்வதற்கு எளிதில் சம்மதித்திருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. அந்நகரை விட்டுச் செல்வதற்கு அவர் விரும்பவில்லை. ஆண்டவரின் தூதர்கள் அவரைக் கட்டாயப்படுத்தி, கையைப் பிடித்துவெளியே கூட்டிச்செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆண்டவர் அவர் மீது இரக்கம் வைத்திருந்ததால் ஆண்டவரின் தூதர்கள் அவர்களின் கைகளைப் பிடித்துகொண்டு போய் நகருக்கு வெளியே விட்டார்கள் என ஆசிரியர் கூறுகிறார். அதன்பின் சமவெளிப் பகுதிகளில் தங்காமல் மலையை நோக்கித் தப்பி ஓடு; இல்லையேல் அழிந்துபோவாய் எனக்கூறி மலைகளுக்குத் தப்பியோடக் கூறுகிறார். ஆனால் லோத்து மலைகளுக்குத் தப்பியோட தயக்கம் காட்டுகிறார். பக்கத்தில் சமவெளிப் பகுதியில் அமைந்திருந்த ஒரு சிறிய ஊரில் தங்குவதற்கு அனுமதி கேட்கிறார்.ஆண்டவரின் தூதர்கள் அதற்கும் இசைகின்றனர். லோத்துவும் அவரது குடும்பத்தினரும் அந்த ஊரிலுள்ள ஒரு குகைக்குச் செல்லுமட்டும் ஆண்டவரின் தூதர்கள் சோதோம் நகரை அழிக்கவில்லை. மாலை நேரத்தில் லோத்துவும் அவரது குடும்பத்தினரும் அந்த சிற்றூரைச் சென்றடைகின்றனர். அப்பொழுது ஆண்டவர் வானத்திலிருந்து சோதோம், கொமோரா நகர்களின்மேல் கந்தகமும் நெருப்பும் பொழியச் செய்தார். அந்நகரங்களையும் அவற்றைச் சுற்றியிருந்த சமவெளி முழுவதையும் அழித்தார். நகர்களில் வாழ்ந்த அனைவரையும், நிலத்தில் தளிர்த்தனவற்றையும் அழித்தார் (தொநூ 19:24-25) எனப் பார்க்கிறோம். ஆண்டவர் லோத்தின் மீது இரக்கம் கொண்டிருந்ததால் அவர் தங்கியிருந்த ஊரை அழிக்கவில்லை. லோத்துவும் அவரது குடும்பத்தினரும் சென்று தங்கிய ஊரின் பெயர் சோவார். சோவார் என்றால் சிறியது அல்லது முக்கியமற்றது என்பது பொருள். சோவார் ஊரில் அவர்கள் சென்று தங்குவதற்கு முன் இன்னொரு நிகழ்வு நடக்கிறது. தங்களைக் காப்பதற்காக ஓடும் வேளையில் அவர்களில் எவரும் திரும்பிப் பார்க்கக்கூடாது என்ற ஆண்டவரின் தூதர்கள் அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தனர். ஆர்வமிகுதியால் சோதோம் நகர் அழிவதைப் பார்ப்பதற்காக லோத்துவின் மனைவி திரும்புகிறாள். விளைவு? அவர் உப்புச்சிலையாக மாறுகிறார்.

தொநூ 19 வது பிரிவில் வருகின்ற சோதோம் கொமோரா நகர்களின் அழிவுபற்றியபாடம் நமக்குப் பலசெய்திகளையும் தருகிறது. முதலாவதாக, லோத்துவின் விருந்தோம்பல் அவரை விரும்தோம்பலுக்கு எடுத்துக்காட்டாக வெளிப்படுத்துகிறது. விருந்தோம்பலில் ஆபிரகாம் சிறந்து விளங்குவது போல லோத்தும் சிறந்து விளங்குகிறார். சோதோமுக்கு வந்த ஆண்டவரின் தூதர்களைக் கண்டதும் அவர்களுக்கு வணக்கம் செலுத்துகிறார்; அவர்களை இல்லத்திற்கு வந்து தங்குவதற்கு அழைக்கிறார்; அவர்கள் தங்கி இளைப்பாறுவதற்கு தேவையான அனைத்தையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார். புளிப்பற்ற அப்பம் சுட்டு அவர்களுக்கு விருந்தளிக்கிறார். ஓரினச் சேர்க்கையில் ஊறிப்போன அந்த ஊரின் மக்கள் அவருடைய வீட்டைச் சூழ்ந்து கொண்டு,



விருந்தினர்களாக வந்த ஆண்டவரின் தூதர்களோடு உறவுகொள்ளக் கேட்டபோது, அவர்களைத் தப்புவிக்கச் செய்வதற்காக ஆண் தொடர்பு அறியாத அவரது புதல்வியரை அவர்களுக்குத் தரவும் தயாராக இருக்கிறார். இவையனைத்தும் விருந்தோம்புதலுக்கு அவரை எடுத்துக்காட்டாக வெளிப்படுத்துகின்றன. லோத்துவிடம் சில பலவீனங்களையும் பார்க்கிறோம். ஆண்டவரின் தூதர்கள் சோதோம் நகரிலிருந்து தப்பியோடக் கூறியபோது அவர் தயக்கம் காட்டுகிறார்; ஆண்டவரின் வார்த்தைகளுக்கு ஆபிரகாமைப் போல அவர் கீழ்ப்படியவில்லை; அவரது மருமகன்களை அவரால் காப்பாற்ற முடியவில்லை; அவர்கள் அவருடைய சொல்லுக்கு செவிமடுக்கத் தயாராக இல்லை.


இரண்டாவதாக, நமது இறுதிக்காலத்தைப் பற்றி நினைவுகூர்வதற்கு சோதோமின் அழிவு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. இறுதிக்காலத்தையும் இறையாட்சியின் வருகையையும் பற்றி இயேசு கூறுகின்றபோது, லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள் (லூக்கா 17:32) என்கிறார். மானிடமகன் வெளிப்படுகின்ற நாள் நோவா படகினுள் நுழைந்த நாளைப் போலவும் லோத்து சோதோமைவிட்டு வெளியேச் சென்ற நாளைப் போலவும் இருக்கும் என்கிறார். கடவுளின் குரலுக்குச் செவிகொடுத்துச் செயல்படுபவர்கள் மட்டுமே வருகின்ற தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்வர். இயேசுவின் சீடர்களாக வாழ்வதற்கு நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதை அவரே தீர்மானிப்பார்; நாம் தீர்மானிப்பதற்கு அதில் எதுவுமில்லை. கடவுளின் தீர்ப்புக்கு ஏற்றவாறு நமதுவாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான நேரத்தையோ காலத்தையோ நாம் தேர்ந்தெடுக்க முடியாது. வயலில் இருப்பவர் தம் மேலுடையை எடுக்கத் திரும்பி வரவேண்டாம். (மத்தேயு 24:18) என்கிறார் இயேசு. இயேசுவைப் பின்செல்வதற்காக அழைக்கப்பட்டவர்களில் தங்கள் குடும்பத்தினரிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் விடைபெற்றுவர அனுமதி கேட்டவர்களிடம் இயேசு கூறுவது இதுவே கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல (லூக்கா 9:62). இறுதிக்காலத்தை எதிர்கொள்வதற்கு நாம் எப்போதும் தயாராக இருக்கவேண்டும்.

மூன்றாவதாக, ஆண்டவரின் இரக்கம்தான் லோத்துவையும் அவரது குடும்பத்தினரையும் அந்தநகரிலிருந்து வெளிக்கொண்டு வந்து அழிவிலிருந்து காப்பாற்றுகிறது. தனிப்பட்ட முறையில் லோத்துவால் அந்த நகரைவிட்டு வெளிவர முடியவில்லை. கடவுள் ஆபிரகாமை நினைவு கூர்ந்ததால் லோத்துவையும் அவரது குடும்பத்தினரையும் காப்பாற்றினார் (தொநூ 19:29) என வாசிக்கிறோம். லோத்துவின் வாழ்க்கை அவரையும் அவரது குடும்பத்தினரையும் காப்பாற்றுவதற்குப் போதுமானதாக இல்லை. நாமும் அந்தச் சூழ்நிலையில்தான் உள்ளோம். கடவுளின் அருள் இன்றி நாம் தனியாக விடப்பட்டால் பாவவாழ்வில் தான் நிலைத்திருப்போம். ஆனால் கடவுள் நம்மைத் தனியாக விடவில்லை. நமதுநன்மைத் தனங்களை மட்டும் அவர்நினைப்பதில்லை. லோத்து நல்லது எதுவோ, நேர்மையானது எதுவோ அதையேச் செய்ய விரும்புகிறார்; ஆனால் தவறுகிறார், தோல்வியடைகிறார். ஏனெனில் கடவுளின் வாக்குறுதிகளில் அவர்நம்பிக்கை கொள்ளவில்லை. ஆனாலும் கடவுள் அவரை மீட்கிறார். அனைவரும் மீட்புபெற வேண்டும் என்பதுதான் ஆண்டவரின் திருவுளம்; அதேவேளையில் தீர்ப்பளிப்பதும் ஆண்டவருடைய பணி. பாவங்களில் மலிந்த சோதோம் கொமோரா நகரங்களுக்கு

பயணம் தொடரும்,

அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF





# மறையுரை

அருட்பணி. சூ.ஸ்டீபன் கஸ்பார்
பங்குதந்தை
ஆரோக்கிய அன்னை ஆலயம்
குமரன் திருநகர் பங்கு, திண்டுக்கல் மறைமாவட்டம்.

## தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு

13-03-2022

**தொ.நூ. 15 : 5-12, 17, / பிலி. 3:17-4:1 / லூக். 9:28-36**

இறையேசுவில் அன்பானவர்களே, திருவருகைக் காலத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமைக்கான சிந்தனைகளை நான் சிந்தித்துக் கொண்டிருந்தபோது ஒரு மையச் செய்திக்குப் பதிலாக ஏழு மையச் செய்திகளை இன்றைய விழா தருவதை உணர்ந்தேன். ஏன் ஏழு செய்திகளை நான் சிந்தித்தேன் என்று பார்த்தபோது கடைசியாக அதற்கு பதிலும் கிடைத்தது. எப்பொழுதுமே இரண்டு பெண்கள் ஒன்று சேர்ந்தால் அங்கு பல வியங்களைப் பற்றி பேசுவார்கள் அல்லவா? அது போல இன்று நற்செய்தியில் அன்னை மரியாளும் எலிசபெத்தும் சந்திக்கிறார்கள் அதனாலோ என்னவோ இன்று ஒன்றுக்கு மேற்பட்ட வகை செய்திகளை நான் உங்களுக்கு வழங்கப் போகிறேன். இறுதியில் உங்களுக்குப் பிடித்தமானதாக இருக்கிற ஒன்றை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

**1. வாழ்த்து**

நாம் வழக்கமாக ஒருவரை சந்திக்கும் போது வாழ்த்துகின்றோம். அதேபோல இன்று அன்னை மரியாள் எலிசபெத்தை சந்தித்தபோது அவரை வாழ்த்துகின்றார். அவருடைய வாழ்த்து எலிஸபெத்தை பாதிக்கின்றது. இயேசுவை சுமந்து வந்த காரணத்தினால் மரியாளுடைய வாழ்த்தைக் கேட்டவுடனேயே எலிசபெத்தின் உடலிலும் உள்ளத்திலும் ஒருவிதமான மாற்றத்தைக் காண முடிகிறது. எனவே, அமைதியின் அரசராகிய நம் ஆண்டவர் இயேசுவை சுமந்து நாம் செல்லும்போது நாம் யாரையெல்லாம் வாழ்த்துகின்றோமோ அவர்களிலே மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

**2. திருமுழுக்கு யோவானின் மகிழ்ச்சி**

அன்னை மரியாளைத் தொடர்ந்து இயேசுவினால் மகிழ்ச்சியை உணர்ந்தவர் திருமுழுக்கு யோவான் தான். ஏனென்றால், அவர் தன் தாயின் கருவில் இருக்கும்போதே இயேசுவின் வருகையை கண்டு மகிழ்ந்தார். எனவே இயேசுவின் பிறப்புப் பெருவிழாவை கொண்டாடயிருக்கிற நாம் அந்த மகிழ்ச்சியை அனுபவிக்க முடிகிறதா என்று சிந்தித்துப் பார்ப்போம்.

**3. இந்த ஞாயிறு கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு இவற்றின் ஒரு முன்னோட்டம்.**

இன்றைய நற்செய்தியில் எலிசபெத், மரியாளைக் கடவுளின் தாய் என்று பிரகடனம் செய்வதால் இன்று புத்தாண்டு விழாவின் ஒரு முன்னோட்டம் என்றும் நாம் அறியலாம். எனவே, இந்த ஞாயிறு நாம் கொண்டாடப் போகின்ற கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விழாவின் சிறப்பை நமக்கு உணர்த்துகின்றது.

**4. இயேசுவை கருத்தரித்தல்**

இன்று நற்செய்தியில் இரு கருவுற்ற மகளிர் உரையாடலை நாம் கேட்டோம். அவர்கள் அன்னை மரியாளும், எலிசபெத் அம்மாளும். ஆண்கள் கருத்தரிக்க முடியுமா? நிச்சயமாக முடியாது ஆனால் இயேசுவை நாமும் நம்முடைய உள்ளத்திலே கருத்தரிக்கலாம். நம்முடைய இதயத்தில் கருத்தரிக்கலாம்.

**5. மனிதமும் இறைமையும் சந்திக்கின்ற தருணம்**

அன்னை மரியாள் இயேசுவைத் தன் கருவில் சுமந்தது இறைத்தன்மையை குறிக்கின்றது. எலிசபெத் திருமுழுக்கு யோவானைத் தன் கருவில் சுமந்தது மனிதத் தன்மையை குறிக்கிறது. எனவேதான், மனிதமும் இறைமையும் இணைகின்ற இடமாக இந்த இடம் அமைகின்றது.

**6. கபிரியேல் தூதர் உரைத்த வார்த்தைகள் உண்மையாயின**


பெண்களுக்குள் பேறுபெற்றவர் நீர் உமது திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் பேறு பெற்றவர் என்று கபிரியேல் தூதர் உரைத்த வார்த்தைகள் முற்றிலும் உண்மையானது. ஏனென்றால், அதே வார்த்தைகளைச் சொல்லி எலிசபெத்தும் அன்னை மரியாளை வாழ்த்துகின்றார்.

**7. நம்பிக்கை**

இன்றைய நற்செய்தியின் இறுதிப்பகுதியில் ஆண்டவர் சொன்ன வார்த்தைகள் நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர் என்று எலிசபெத் மரியாளை வாழ்த்தினார். இதிலிருந்து அன்னை மரியாள் கடவுளுடைய வார்த்தையின் மீது நம்பிக்கை வைத்திருந்தார் என்பது புலப்படுகிறது.

இயேசுவின் அன்பானவர்களே இந்த ஏழு சிந்தனைகளில் என்னைக் கவர்ந்தது கடைசி செய்தியாகிய அன்னை மரியா கடவுளின் வார்த்தை மீது நம்பிக்கை வைத்திருந்தார் என்பது. ஆண்டவர் தனக்கு சொன்னவை நிறைவேறும் என்று மரியா உறுதியாக நம்பினார். இந்த நம்பிக்கை நம் ஒவ்வொருவருக்கும் வேண்டும். அத்தகைய நம்பிக்கையோடு இயேசு பிறப்புப் பெருவிழாவைக் கொண்டாட தயாரிப்போம்.

– ஆமென்



# தவக்காலத்தின் 2-ஆம் ஞாயிறு

தொ.நூ. 15 : 5-12, 17, 18 & 21, பிலி. 3:17, 41

லூக். 9:28-36

**13-03-2022**




பா. சேவியர்

பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

துன்பத்தைக் கண்டு துவண்டுவிடாது, இன்பத்தைக் கண்டு இறுமாந்துவிடாது, நிதானமாக செயல்படவும், செபத்தின் துணைகொண்டு வாழ்வை உருமாற்றம் செய்யவும், இயேசுவோடு உறவில் நிலைத்திருக்கவும் வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு திருவழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

சிலர் ஒப்பனை, ஆடை அலங்காரம் மூலம் உருமாற்றம் அடைய விரும்புகின்றனர். சிலர் ஆடம்பரமான வசதி வாய்ப்புகளுக்காக குறுக்கு வழிகளில் பணத்தைத் தேடி பொருளாதார உருமாற்றத்தை உருவாக்குகின்றனர். சிலர் அடுத்தவரை சுரண்டியை ஏமாற்றி அதன் மூலம் தம் வாழ்க்கை உருமாற்றம் அடைய செய்கின்றனர். ஆனால் இயேசுவோ துன்பங்களின் மூலம், செபத்தின் மூலம் நம் வாழ்க்கை உருமாற்றம் அடைய வேண்டும் என்பதை இன்றைய வார்த்தை வழிபாடு வழியாக எடுத்துரைக்கின்றார்.

செபமே இயேசுவை உருமாற்றத்திற்கு இட்டுச் செல்கிறது. செபத்தின் வழியேதான் அவரது மாட்சிமை வெளிப்படுகிறது. செபம் தான் இவரே எனது அன்பான மகன் என்று விண்ணகத் தந்தையை சாட்சியம் கூற வைக்கிறது.

தம் வாழ்வின் முக்கிய கட்டங்களில் எல்லாம் இயேசு செபிக்கிறார். ஈராறு சீடரை தேர்ந்தெடுக்குமுன் இயேசு செபித்தார். தம் திருமுழுக்கின்போது செபித்தார். பேதுருவின் விசுவாச அறிக்கைக்கு முன் இயேசு செபித்தார். சீடருக்கு செபிக்க கற்றுக் கொடுக்குமுன் செபித்தார். நாமும் செபிக்க வேண்டும் என்று பன்முறை வேண்டுதல் விடுத்துள்ளார்.

இயேசுவின் உருமாற்றத்திலே, அவரது மகிமையிலே,அவரது உயிர்ப்பிலே நாமும் பங்குபெற வேண்டுமாயின், அவரது அருளையும் ஆசியையும் பெற வேண்டுமாயின் நமது வழியும் செப வழியாகத் தான் இருக்க வேண்டும் என்பதை முழுமையாக உணர்ந்து வாழவும், சண்டைகள் இல்லா அமைதிப் பூங்காவாக உலகம் உருமாற்றம் பெறவும், இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

இறைவன் ஆபிரகாமுக்குத் தந்த வாக்குறுதியை உறுதிப்படுத்தும் நிகழ்வு இன்றைய முதல் வாசகமாக அருளப்பட்டுள்ளது. ஆபிரகாம் கடவுளின் வார்த்தைக்கு கீழ்படிந்து நடந்தார். அவர்மீது அசைக்க முடியாத ஆழ்ந்த விசுவாசம் கொண்டு வாழ்ந்தார். அதற்கு பரிசாக ஆபிரகாமோடு ஆண்டவர் செய்த உடன்படிக்கையை எடுத்துக் கூறும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

உலகில் உள்ள அனைத்தையும் குப்பையெனக் கருதி புறந்தள்ளி கிறிஸ்துவையே ஆதாயமாக்கிக்கொண்டு அவரோடு ஒன்றித்து வாழ்ந்த பவுலடிகளின் அறிவுரையே இன்றைய இரண்டாம் வாசகம் ஒவ்வொரு குடும்பத் தலைவனும் தலைவியும், பொறுப்புள்ள பதவியில் இருக்கும் ஒவ்வொருவரும் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்துவனும் கிறிஸ்துவை பிரதிபலிக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) ஒவ்வொரு கணமும் இவ்வுலகை உருமாற்றம் செய்து வரும் தந்தையே இறைவா, பிறரன்பின் சாட்சியமாகத் திகழும் மோசேவைப் போல், இறையன்பின் அடையாளமாகத் திகழும் எலியாவைப் போல் மீட்புப் பணியில் தங்களை முழுமையாக அர்ப்பணித்த எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் தங்கள் பணி வாழ்வில் எதிர்படும் அனைத்து சோதனைகளையும் வென்று, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருப்பணியை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு வேண்டிய இறையாற்றலையும், வல்லமையையும், உடல் நலத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) என்றும் மாறாத தத்துவமாய் விளங்கும் வல்ல தேவனே இறைவா, உம் திருமகன் இயேசு தம் மரணத்தை ஆவலுடன் ஏற்றுக் கொள்ள ஊக்கம் தரும் நிகழ்வாக இறை வேண்டலும், தோற்ற மாற்றமும் அமைந்துள்ளன என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து, மனமாற்றம் அடைவதற்கு ஏற்ற காலம் இத்தவக்காலம் என்பதை புரிந்து, செப வாழ்வில் நாங்கள் நிலைக்கவும், எங்களது செபம் உமது திருவுளத்திற்கு பணிந்து நடக்க ஊக்கம் தருவதாக அமைந்திடவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) என்றும் மறவாது என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, ஆபிரகாம் உம்மேல் கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையால் விசுவாசத்தின் தந்தையாக உருமாற்றம் அடைந்ததைப் போல், ஆகட்டும் என்ற சொல்லால் கன்னி மரியாள் மீட்பரின் தாயாய் உருமாற்றம் கொண்டதைப் போல், நாங்கள் இத்திருப்பலி வழியாக, இறை வார்த்தை வழியாக, மனமாற்றம் அடைந்து, கிறிஸ்துவாக உருமாற்றம் அடைய வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) அமைதியின் அரசே இறைவா, கெட்டப் போரிடும் நாடுகள் மனம் திருந்தி அமைதிப் பாதைக்குத் திரும்பவும், உலகம் அமைதிப் பூங்காவாகத் திகழவும் உம்மை மன்றாடுகிறோம். போரால் இறப்புகளையும், இழப்புகளையும், சொல்லொண்ணா வேதனைகளையும் சந்தித்து வரும் மக்களுக்கு ஆறுதல் தந்து அவர்கள் இயல்பு நிலைக்கு திரும்ப அருள் தாரும். போரால் இறந்தவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும். காயம்பட்டவர்கள் குணம் அடைந்து நலம் பெற அருள் தாரும். போர் புரியும் நாடுகளின் தலைவர்கள் பகைமையையும், பிரிவினை எண்ணங்களையும் களைந்து சமாதானத்தின் கருவிகளாக செயல்பட்டு அமைதி பேச்சுவார்த்தை மூலம் உலகில் ஒற்றுமையையும், சமாதானத்தையும் நிலை நிறுத்த அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.




## திரு.வி.க.வின்
## கிறிஸ்து மொழிக் குறள்



**நிறைசமா தானம் நிகழ்த்துவோர் வாழி**
**இறைமக்கள் ஆவர் இனிது.**

**நிறைவான சமாதானம் செய்பவர்கள் வாழ்வார்களாக, அவர்கள் இறைவனுடைய பிள்ளைகள் ஆவார்கள்.**

நிகழ்த்துவோர் – செய்பவர்கள்    இறைமக்கள் – இறைவனுடைய பிள்ளைகள்



# புனித சூசையப்பர் மரியாவின் கணவர் விழா

2 சாமு. 7:4-5, 12-14, 16
உரோ. 4:13, 16-18, 22. மத். 1:16, 18-21, 24

**19-03-2022**




பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

ஆழ்ந்த அமைதியில் இறை செய்தியைக் கேட்டு, சந்தேகங்களை சந்தோசமாக மாற்றி தெளிவடைந்து, அமைதியில் பணிந்து நடப்பதுவே அழகு என்று வாழ்ந்து காட்டிய தூய சூசையப்பரைப் போல் நாமும் வாழ வேண்டும் என்ற வேட்கையோடு இந்த இறை சந்நதிமுன் குழுமியுள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் புனித சூசையப்பர் மரியாவின் கணவர் விழா திருப்பலிக்கு அன்புடன் வரவேற்கிறேன்.

சூசையப்பர் தாவீதின் வழி வந்தவர், நேர்மையாளர், நீதிமான், அன்னை மரியாவுக்கு அனைத்திலும் உறுதுணை யாக இருந்த உற்ற துணை, குழந்தை இயேசுவை கண்ணின் மணிபோல் பாதுகாத்து வளர்த்த அன்பு தந்தை.

எல்லோரும் நல்லவரே, அனைவரும் நேர்மையாளர்களே என்ற சிந்தனை உள்ளவர்களால் மட்டுமே நேர்மையாளர் களாக வாழ முடியும். அத்தகைய சிந்தனை கொண்ட சித்தராக, பண்பாளராக வாழ்ந்த சூசை, கன்னி மரியாவின் கணவர் என்பதை மகிழ்ச்சியோடு அறிக்கையிட்டு அதனை ஆனந்தமாக கொண்டாட திருச்சபை நம்மை அழைக்கிறது.

இல்லறமோ துறவறமோ நாம் எந்த நிலையை தேர்வு செய்தாலும், இறைவன் நம்மை அழைத்திருக்கிறாரா? என்று கேள்வி கேட்டுக் கொண்டே காலத்தைக் கடத்தாமல் தேர்ந்தெடுத்த வாழ்வில் புனித சூசையப்பரைப் போல் இறுதி மட்டும் உறுதியுடன் பயணம் செய்து வாழ்வை நிறைவு செய்ய இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

புனித சூசையப்பர் தாவீது குலத்தில் வந்தவர், அவர் வழியாக இயேசுவிலே தாவீது குலம் முழுமை பெறுகிறது என்பதை புலப்படுத்துகிறது இன்றைய முதல் வாசகம். தாவீதும், அவர் குலக் கொழுந்தான இயேசுவும் ஆலயம் கட்டினர். தாவீது அழிந்துவிடும் பொருட்களால் நிலைத்து நிற்க முடியாத ஆலயத்தைக் கட்டினார். இயேசுவோ என்றும் வாழும் தூய ஆவியாரால் நெடிது வாழும், என்றும் நிலைத்து நிற்கும் கோயிலை கட்டினார். நாம் ஒவ்வொருவரும் கடவுள் வாழும் திருக்கோயில் என்பதை நெகிழ்வுடன் உணர்ந்து மகிழ்வுடன் இவ்வாசகத்தை கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

ஆபிரகாமின் நம்பிக்கையைப் பற்றியும், அவர் இறைவனுக்கு ஏற்புடையவரானது பற்றியும் இன்றைய இரண்டாம் வாசகம் எடுத்துரைக்கிறது. இறையருளே நம்பிக்கையின் தொடக்கம். நம்பிக்கையே பணிவின் தொடக்கம். ஆபிரகாமின் நம்பிக்கையும், சூசையின் பணிவும் இருந்தால்போதும் இறையருள் தானாய் வந்து சேரும். கொல்பவரும் நானே. உயிரளிப்பவரும் நானே, காயப்படுத்து பவரும் நானே, குணப்படுத்துபவரும் நானே என்ற சொற்கள் தளர்ந்துபோன விசுவாசத்தை வலுப்படுத்தும் என்ற நம்பிக்கையோடு இவ்வாசகத்திற்கு செவி கொடுப்போம்.

## மன்றாட்டுகள்

1. அன்புத் தந்தையே இறைவா, திருச்சபையின் தலைவரான எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள் மற்றும் அருட்பணியாளர்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும், எல்லாவற்றிலும் உம்மையே முழுமையாகத் தேடி உமக்கு தொண்டு செய்வதையே எந்நாளும் தம் கடமை என்று வாழ்ந்த தூய வளனாரைப் போல் இவர்கள் வாழவும், அவர் கொண்டிருந்த ஆன்மீகம், அவர் கடைப் பிடித்த கடவுள் பக்தி, அவர் கொண்டிருந்த இறை நம்பிக்கை ஆகியவற்றை இவர்கள் பெறவும், அதன் மூலம் சிறந்த ஞானத்தையும், நிதானத்தையும், நிறை வாழ்வையும், நிம்மதியையும் அவர்கள் பெற்று வாழவும் அருள் புரிய வேண்டுமென்று தூய சூசையப்பர் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உமது குடும்பமும், உனது அரசும் உறுதியாக இருக்கும் என்று தாவீதுக்கு நம்பிக்கை அளித்த அன்புத் தந்தையே இறைவா, புனித சூசையப்பரை குடும்பங்களின் பாதுகாவலராக தந்தமைக்காக உம்மை போற்றுகிறோம். அவரது நன்மாதிரியை பின்பற்றி, நேர்மையாளராக வாழவும், பிறர் மீது நல்லெண்ணம் கொண்டோராய் வாழவும், அவரைப் போல் மௌனத்தில் உம்மைத் தேடியும், உழைப்பில் உம்மை கண்டு வாழவும் அருள் புரிய வேண்டுமென்று தூய சூசையப்பர் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்புத் தந்தையே இறைவா, தனது வாழ்வில் ஒவ்வொரு இக்காட்டான கட்டத்திலும் சரியான முடிவெடுத்து, யாருக்கும் பாதிப்பு இல்லாமல் வாழ்ந்து காட்டிய புனித சூசையப்பரைப் போல் எங்களது வாழ்வில் விடை காணமுடியாத பல கேள்விகள் எங்களை வாட்டுகிறபோது அவற்றை பொறுமையோடும், நம்பிக்கையோடும் எதிர்கொண்டு வெற்றி பெறவும், உமது விருப்பத்தை கண்டுணர்ந்து கடமை உணர்வோடு வாழவும் வரமருள வேண்டுமென்று புனித சூசையப்பர் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. குடும்பங்களின் தலைவரான இறைவா, எங்களது குடும்ப வாழ்க்கை விண்ணகத்தில் உறுதி செய்யப்பட்ட ஒன்று என்பதை நாங்கள் ஒவ்வொருவரும் முழுமையாக உணர்ந்து வாழவும், கணவன் மனைவியாகிய நாங்கள் ஒருவரையொருவர் நிபந்தனையின்றி ஏற்று, குறை நிறைகளை ஒன்றாக பாவித்து வாழும் மனப்பக்குவத்தையும் முதிர்ச்சியையும் தாரும். எங்கள் அன்பில் விளைந்த எங்கள் பிள்ளைகளை ஞானத்திலும் ஒழுக்கத்திலும் வளர்த்து, தூய வளனாரின் திருக்குடும்பம் போல் எங்கள் குடும்பமும் திகழ அருள் புரிய வேண்டுமென்று தூய சூசையப்பர் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# தவக்காலம்


சொல்லும் சில சேதி : ஸ்தாரோஸ் என்னும் கிரேக்கச் சொல்லுக்குத் தண்டனையின் கருவி என்னும் பொருளுண்டு. சில வேளைகளில் ஸைலோன் என்னும் கிரேக்கச் சொல்லுக்கு மரம் அல்லது குற்றவாளிகளுக்கு மரணதண்டனை நிகழ்த்த வரலாற்றில் பயன்படுத்தப்பட்ட ஒரு மரச்சட்டம் அல்லது மரவடிவம் என்று பொருள்படும். இந்தச் சிவவை இயேசு தேர்ந்து கொண்ட துன்பம், பாடுகள் மற்றும் இந்த உலகைத் தீமையிலிருந்து மீட்க பயன்படுத்திய உன்னத கருவி. (காண்: தி.பா: 5:30. 10:39, 13:29, கலா.3:13, 5:24, 1 பேது. 2:24) விவிலியம் தெளிவாகக் கூறுகிறது.


1. சிலுவை தண்டனைகள் வழங்கப்பட்ட இடங்கள் : கி.மு.1700-ல் சிவவையில் அறையப்படுதலைப்பற்றி மிகப் பழைமை வாய்ந்த குறிப்பு அமுராபியின் குறிப்பில் காணப்படுகிறது.

2. புதிய அசிரிய அரசில் கி.மு. 10-7ஆம் நூற்றாண்டுகளில் சிலுவைச்சாவு தண்டனைகள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

3. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் ஹெடோட்டாஸின் குறிப்பிலும் சிலுவைப்பற்றிய குறிப்புகளை அறியமுடிகிறது. பிற நாடுகளிலும் உரோமைப் பேரரசுகளுக்கும் இந்த வழக்கம் பரவியிருக்கிறது.

4. இத்தண்டணை மேலும் மத்தியதரைக் கடல் சுற்றிலும் பண்டைய காலத்தில் கி.மு.6 லிருந்து கி.பி.4-ம் நூற்றாண்டு வரை பயன்பாட்டிலிருந்தது.





5. கி.பி.337-ல் கான்ஸ்டான்டைன் (உரோமைப் பேரரசு) என்ற முதல் கிறித்தவ அரசரால் தடைசெய்யப்பட்டது. இதனால், இயேசுகிறித்துவுக்கு மகிமை சேர்ப்பதாக கான்ஸ்டான்டைன் அரசன் எண்ணினார். ஆனால், பிற்காலத்தில் உரோமைப் பேரரசால் சிலுவைச் சாவு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. மேலும், இத்தண்டனை மிகவும் இழிவானதாகவும், கொடுமையாகவும் கருதப்பட்டது. தங்கள் நாட்டுக்குடிமகட்கு வழங்கக்கூடாத தண்டனையாகக் கருதினர்.

தண்டனைவழங்க தேர்வு செய்யப்பட்டவர்கள் : அவமானத்திற்குரியவர்கள், அடிமைகள், குடிமக்கள் அல்லாதோர், கிளர்ச்சியில் ஈடுபடுபவர், கொலை வழக்குகளுக்காக, தேசத்துரோகக் குற்றங்களுக்காக, குடிமக்களுக்குக் கூட வழங்கப்பட்டது.

இறுதியாக : அன்பு இதழ்வாசகர்களே, கிறிஸ்து பிறப்பிற்கு முன்பே, சிலுவைத் தண்டனைகள் வழங்க்பபட்டதை விவிலிய வரலாற்றில் நாம் காண்கிறோம். மேற்கண்ட சிலுவைச் சொல்லும் சேதியைக் கண்ட நாம், எவ்வாறு மக்கள் வேதனை நிறைந்த இத்தண்டனையை அனுபவித்திருப்பார்கள் என்று நினைக்கவே மெய்சிலிர்க்கின்றதல்லவா? ஆனால், காரணங்களைக் கூறுகிறார்கள். எனினும் நம் ஆண்டவர் இயேசு குற்றமற்றவர் என அறிந்தும் தண்டனையை ஏற்றாரே இத்தவக்காலத்தில் சிந்திப்போம்.

அருட்சகோதரி. **சௌந்தரி எபினேசர்.** வ.பி.ச.

# இந்த வார விவிலிய வாசகங்கள்



## தவக்காலம் 2ம் ஞாயிறு

**13.03.2022 - ஞாயிறு**

**முதல் வாசகம் :** தொடக்கநூல் 15:5-12,17-18,21

**இரண்டாம் வாசகம் :** பிலிப்பியர் 3:17-4:1

**நற்செய்தி :** லூக்கா 9:28-36

**14.03.2022 - திங்கள்**

**முதல் வாசகம் :** தானியேல் 9:4-11

**நற்செய்தி :** லூக்கா 6:36-38



**15.03.2022 - செவ்வாய்**

**முதல் வாசகம் :** எசாயா 1:10,16-20

**நற்செய்தி :** மத்தேயு 23:1-12

**16.03.2022 - புதன்**

**முதல் வாசகம் :** எரேமியா 18:18-20

**நற்செய்தி :** மத்தேயு 20:17-28

**17.03.2022 - வியாழன்**

**முதல் வாசகம் :** எரேமியா 17:5-10

**நற்செய்தி :** லூக்கா 16:19-31

**18.03.2022 - வெள்ளி**

**முதல் வாசகம் :** தொடக்கநூல் 37:3-4,12-13,17-28

**நற்செய்தி :** மத்தேயு 21:33-43,45-46

**19.03.2022 - சனி** (புனித யோசேப்பு புனித கன்னி மரியாவின் கணவர்)

**முதல் வாசகம் :** 2 சாமுவேல் 7:4-5,12-14,16

**இரண்டாம் வாசகம் :** பிலிப்பியர் 2:6-11

**நற்செய்தி :** மத்தேயு 1:16,18-21,24

எஸ்ரோன் வித்யாசாகர்

# துணிவோடு முன்னோக்கிச் செல்லுங்கள்





கோவிட் 19 பெருந்தொற்று உருவாக்கிய நெருக்கடிகளின் காரணமாக, 2022ம் ஆண்டு நடைபெறுவதாக இருந்த உலக இளையோர் நாள் நிகழ்வுகள், 2023ம் ஆண்டு ஆகஸ்ட் 1 முதல் 6ம் தேதி முடிய நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 36வது உலக இளையோர் நாளுக்குத் தயாரிப்புப் பணிகளை மேற்கொண்டுவரும் தன்னார்வ இளையோரை ஊக்கப்படுத்தி செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார். போர்ச்சுகல் நாட்டு லிஸ்பன் நகரில் நடைபெறவிருக்கும் இளையோர் நாள் தயாரிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள இளையோர், தங்களின் படைபாற்றல் அனைத்தையும் பயன்படுத்தி, கிறிஸ்தவ நம்பிக்கை உயிர்துடிப்புடன் இருப்பதை உறுதிசெய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். தற்போது உலகில் நிலவும் மிகப்பெரும் சவால்களுக்கு மத்தியில், 2023ம் ஆண்டு இந்நிகழ்வு அனைவருக்கும், கடவுள் வழங்கும் மகிழ்ச்சி, உயிர்துடிப்பு மற்றும் பசுமையான நிகழ்வுகளை ஆழப்பதிப்பதாக அமையுமாறு, இந்த தன்னார்வ இளையோர் தங்களின் படைப்பாற்றல்களைப் பயன்படுத்தி தயாரிப்புப்பணிகளை ஆற்றுமாறு திருத்தந்தை கூறியுள்ளார். நம்பிக்கையிலிருந்து பிறக்கும் எதிர்நோக்கிற்குச் சான்றுகளாய்த் திகழ்வதன் வழியாக, இளையோர், தற்போது உலகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் களையவும், அவற்றினின்று வெளிவரவும் இயலும் என்றும் கூறியுள்ள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒன்றிணைந்தால் தற்போதைய பிரச்சனைகளை அகற்றலாம் என்றும் கூறியுள்ளார்.

எஸ்ரோன் வித்யாசாகர்




# திருவிவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட

# தித்திக்கும் திருக்குறள்

## நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
## மலையினும் மாணப் பெரிது.

அதிகாரம் 13

அடக்கமுடைமை

குறள் – 124

**பொருள்:**

தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வை விட மிகவும் பெரியதாகும்.

இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் அடிப்படைத் தேவையாக இருப்பவை உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம். இவைகள் மட்டும் அல்லாமல் ஒரு மனிதனுக்கு அன்றாடத் தேவையாக பொருளாதாரம் மற்றும் தன் அதிகாரத்தை வெளிப்படுத்த ஒரு பதவியும் அவசியமாக இந்தக் காலகட்டத்தில் இருக்கின்றது. அரசர்களைப் போல அனைத்து மக்களையும் கட்டிக்காத்து அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற விருப்பம் ஒவ்வொரு மனிதர்களிடமும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. மேலும் கிடைத்த பதவியிலிருந்து வெளிவர எவருக்கும் விருப்பமும் இருப்பதில்லை. தன்னை முன்னிலைப் படுத்துவதில் மிக்க கவனம் செலுத்தி, இந்த உலக பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இதை முறியடித்தவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. தான் அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியவர்.

இயேசு கிறிஸ்து சாதாரண மனிதனாகத்தான் இந்த உலகத்தில் பிறந்தார். மனிதன் என்றாலே எல்லா விருப்பங்களும் உண்டு; எல்லா தேவைகளும் உண்டு; ஆனாலும் இந்த உலகம் மாயை என்பது அவருக்கு தெரியும். காண்கின்ற உலகம் நமது அல்ல; காணாத பரலோகம் தான் நமது உரிமைச் சொத்து என்பதை நன்கு அறிந்தவர்..

படைப்பு மட்டும் அல்ல; முதல் கொடையாகத் தூய ஆவியைப் பெற்றுக் கொண்டுள்ள நாமும் கடவுள் நம்மைத் தம் பிள்ளைகளாக்கப் போகும் நாளை, அதாவது நம் உடலை விடுவிக்கும் நாளை எதிர்நோக்கிப் பெருமூச்சு விடு கிறோம். நமக்கு மீட்புக் கிடைத்துவிட்டது. எனினும், எதிர்நோக்கும் அளவில்தான் அது கிடைத்துள்ளது. கண்ணுக்குத் தெரிகிறதை நோக்குதல் எதிர்நோக்கு ஆகாது. கண்ணால் காண்கிறதை எவராவது எதிர்நோக்குவாரா? (உரோமையர் 8:23,24)

'மனிதன் துன்பப்படுவதே இந்த அரை சாண் வயிற்றுக்கு தாங்க' என்று எல்லோரும் சொல்வதை நாமும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல; ஆண்டவரின் வாயின் ஒவ்வொரு வார்த்தையிலும் உயிர் வாழ்கிறான் என்று அறிவித்தார்.

இதை சீடர்களிடமோ அல்லது மக்களிடமோ பேசும்பொழுது சொல்லவில்லை. நாற்பதுநாள் உண்ணாமலும் குடிக்காமலும் உபவாசத்தில் இருந்தபொழுது ஆண்டவர் அறிவித்தார்.

சோதனையை மனவுறுதியுடன் தாங்குவோர் பேறுபெற்றோர். ஏனெனில், அவர்களது தகுதி மெய்ப்பிக்கப்படும்போது, தம்மீது அன்பு கொள்வோருக்குக் கடவுள் வாக்களித்த வாழ்வாகிய வெற்றிவாகையினை அவர்கள் பெறுவார்கள்.

(யாக்கோபு 1:12) என்ற வசனத்தின்படி சாத்தானை வென்றார்.

அதன்பின் இயேசு அலகையினால் சோதிக்கப்படுவதற்காகப் பாலை நிலத்திற்குத் தூய ஆவியால் அழைத்துச் செல்லப்பட்டார்.

அவர் நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தார். அதன் பின் பசியுற்றார்.

சோதிக்கிறவன் அவரை அணுகி, 'நீர் இறைமகன் என்றால் இந்தக் கற்கள் அப்பமாகும்படிக் கட்டளையிடும்' என்றார்.அவர் மறுமொழியாக; "மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல; மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்' என மறைநூலில் எழுதியுள்ளதே' என்றார்.

(மத்தேயு நற்செய்தி4:1-4)

அடுத்ததாக ஒரு மனிதனை பாதிப்பது, 'தான் என்ற அகங்காரம்' மற்றும் 'எல்லாம் தனக்கு வேண்டும்' என்ற சுயநலமும் தான். இதிலிருந்தும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னை விடுவித்துக் கொள்கிறார்.

பின்னர் அலகை அவரை எருசலேம் திருநகரத்திற்குக் கூட்டிச் சென்றது. கோவிலின் உயர்ந்த பகுதியில் அவரை நிறுத்தி,

";நீர் இறைமகன் என்றால் கீழே குதியும்; 'கடவுள் தம் தூதருக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார். உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளில் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள்' என்று மறைநூலில் எழுதியுள்ளது' என்று அலகை அவரிடம் சொன்னது.

இயேசு அதனிடம்: 'உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்கவேண்டாம்' எனவும் எழுதியுள்ளதே' என்று சொன்னார்.

(மத்தேயு நற்செய்தி 4:5-7)

இந்த இடத்தில் ஆண்டவர் கர்வம், அகந்தை கொள்ளவில்லை. பொதுவாக மனிதர்கள் 'நான் யார் என்று தெரியுமா? என் தந்தை யார் என்று தெரியுமா? நான் எவ்வளவு பெரிய பணக்காரன் என்று உனக்கு தெரியுமா? எவ்வளவு பெரிய அரசியல் தலைவன் என்று தெரியுமா? என்றெல்லாம் இப்படி எத்தனையோ நபர்கள் தம்பட்டம் அடித்துக் கொண்டு போய்க் கொண்டிருப்பார்கள். ஆனால் ஆண்டவர் எதையும் வெளிப்படுத்த வில்லை. அமைதியாக இருந்து பதிலளித்தார்.

இவ்வுலகில் உயர்பதவி என்கிற வெறி, மனிதனை ஆட்டிப்படைக்கிறது. இந்த உலகத்தில் உள்ள அனைத்திலும் வாழ்ந்திருக்க வேண்டும்,உலக வாழ்க்கையை வாழ்ந்து அனுபவிக்க வேண்டும், வாழ்வது ஒருமுறை அதை வாழ்ந்து பார்க்க வேண்டும், நமக்காகத்தான் இந்த உலகம் இருக்கிறது, அதை அனுபவிக்க வேண்டும் என்றெல்லாம் எத்தனையோ நபர்கள் சொல்லிக் கொண்டு போய்க் கொண்டிருக்கின்றார்கள், அழிவை நோக்கி போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். ஆனால் வித்தியாசமாக ஆண்டவர் பற்றற்ற வாழ்வை மக்களுக்கு எடுத்துரைக்கின்றார். தமது செயலால், தமது வார்த்தைகளால் அழகாக தீமைகளின் உறைவிடமான சாத்தனை எதிர்த்து நின்று ஜெயம் பெறுகிறார்.

மறுபடியும் அலகை அவரை மிக உயர்ந்த ஒரு மலைக்குக் கூட்டிச் சென்று உலக அரசுகள் அனைத்தையும், அவற்றின் மேன்மையையும் அவருக்குக் காட்டி அவரிடம், 'நீர் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து என்னை வணங்கினால், இவை அனைத்தையும் உமக்குத் தருவேன்' என்றது. அப்பொழுது இயேசு அதனைப் பார்த்து, 'அகன்று போ, சாத்தானே, 'உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவர் ஒருவருக்கே பணி செய்' என்றும் மறைநூலில் எழுதியுள்ளது' என்றார்.

பின்னர் அலகை அவரை விட்டு அகன்றது. உடனே வானதூதர் வந்து அவருக்குப் பணிவிடை செய்தனர்.

(மத்தேயு நற்செய்தி 4:11) இவ்வாறு தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கியிருந்து ஒழுகினால், அவரின் உயர்வு இவ்வலகின் உயர்வை விடவும் பெரிதாகும். கடவுளே நேரடியாக வந்து, அனைத்து சோதனை, துன்பங்களிலிருந்து நம்மை விடுவிப்பார்.

*இயேசுவுக்கே புகழ்*

**–லீமா விக்டோரியா**



**திருவிவிலியத்தோடு திருக்குறளும் படிப்போம்...**